# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## “காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட வல்லமையான கிரியைகள் நிரம்பி வழிகின்றன!”

### GCN மற்றும் இணையதளத்தில் 2017 மான்மின் கோடை முகாம்




உலகமெங்கிலும் பல நாடுகளிலிருந்து பெருந்திரளான மக்கள் GCN மற்றும் இணையதளம் மூலமாக 2017 மான்மின் கோடை முகாமில் இணைந்து பங்குபெற்றனர்.

இந்த முகாமில் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்திற்குப் பிறகு பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள சிபு மான்மின் சபையை சார்ந்த கண்காணியை நகோமி அன்சாரோ, வயது 42 மற்றும் சகோதரி இம்மானுவேல் ஷப்ரா, வயது 27, நல்ல பார்வைத்திறனை புதுப்பித்துக் கொண்டனர். நிற்கக்கூட முடியாத சகோதரர் ஜான் லூயிஸ் அன்சாரோ, வயது 15, நடக்க ஆரம்பித்தார். மனிலா மான்மின் சபையை சார்ந்த சகோதரி ஹெலன் யாஸ்மேல், வயது 62, மீன் அலர்ஜியினால் உண்டான அரிப்பு சொறியிலிருந்து குணமானார்கள்.

கென்யாவிலுள்ள நைரோபி மான்மின் திருச்சபையில் இருந்தும்கூட மக்கள் பல வியாதிகளிலிருந்து சுகமடைந்தார்கள். சைனஸ் நோயினால் மூச்சுவிட கஷ்டப்பட்டு வந்த 27 வயதான சகோதரி இபோனே ஒடியுசா அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்திற்குப் பிறகு கஷ்டமில்லாமல் சுவாசிக்க துவங்கினாள். சகோதரி ஜேடிடா வாண்ஸிரா, 19, இரைப்பை வலியிலிருந்து விடுதலை பெற்றாள். சகோதரி கிறிஸ்டல் நாபுரின், 34, தலைவலி முதுகு வலியிலிருந்து சுகமடைந்தாள்.

தாய்லாந்திலுள்ள சியாங்ராய் மான்மின் சபையை சார்ந்த சகோதரி ரேட்ரி, 33, அவர்களின் காதுகளின் பின்னால் நரம்பு சேதமடைந்ததால் உண்டான பின்விளைவுகளிலிருந்து சுகமானார்கள்.

DR காங்கோவின் கின்ஷாசா மான்மின் சபையை சார்ந்த சகோதரார் மாஃப்டு மலாங்கா கிறிஸ்பின், 63, முழங்கால் வலியின்நிமித்தம் சரிவர நடக்காமல் இருந்தார். ஆனால் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தை கோடை முகாமில் GCN வழியாக பெற்ற பிறகு நன்றாக நடக்க துவங்கினார்.

#### உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட வல்லமையான கிரியைகள் நடந்தன

பரிசுத்த வேதாகமத்தின் ஒரு சில பகுதிகளில் காலம் இடத்திற்கு அப்பாற்பட்டு வெளிப்பட்ட கிரியைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்தேயு 8ல், இயேசுவினிடத்தில் ஒரு நூற்றுக்கு அதிபதி வீட்டில் படுத்த படுக்கையாக இருக்கிற தன் வேலைக்காரனை குணமாக்கும்படி மன்றாடினான். இயேசு, “நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன்” என்று சொன்னார். ஆனால் அந்த நூற்றுக்கு அதிபதியோ, “ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.” இயேசுவின் வார்த்தை போதும் அதன்மூலமே தன் வேலைக்காரன் சுகமாவான் என்ற அவன் அறிக்கையில் அவனுடைய ஆச்சரியமான விசுவாசம் உள்ளது. இயேசு அவன் வார்த்தைகளைக் கேட்டு, ஆச்சரியப்பட்டு, “நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது” என்றார். அவன் வேலைக்காரன் அந்த நேரத்திலேதானே சுகமானான்.

லாட்வியாவில் சகோதரி மௌரினா ஜர்க் ஜானே, வயது 31, மான்மின் கோடை முகாம் 2017ல் காணொளி வழியாக பங்குப்பெற்றாள். அவள் பிறவியிலிருந்தே காதுகேளாதவளாய் இருந்தாலும் ஜெபத்தைப் பெற்ற பிறகு அவளின் வலது காது வழியாக கேட்கத் துவங்கினாள்.

சிங்கப்பூர் மான்மின் சபையை சார்ந்த சகோதரி கரோலின் குவான் அய்சிஸ், வயது 27 மற்றும் கரோலின் குவான் அய்சென், வயது 33, முறையே சுவாச பிரச்சனை மற்றும் மூட்டு வலியிலிருந்து சுகமானார்கள். அநேக நேபாள் மான்மின் சபை விசுவாசிகள் GCN வழியாக பங்குப்பெற்ற பிறகு பல வியாதிகளிலிருந்து விடுதலைப் பெற்றார்கள். இந்த கோடை முகாமில், மிகவும் திரளான ஜனங்கள் உலகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலுமிருந்து வந்து, காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட வல்லமையான கிரியைகள் மூலமாக ஜீவனுள்ள தேவனை அனுபவித்தனர் (கூடுதல் சாட்சிகள் 3, 4ம் பக்கம் பார்க்க).

#### ஆவிக்குரிய உலகம், பதில்கள், ஆசீர்வாதங்களை அனுபவித்தல்

பங்குப்பெற்ற அநேகர் ஆவிக்குரிய உலகத்தை அனுபவித்தனர், அது அவர்கள் தங்கள் இருதயங்களை புதுப்பிக்கும் ஒரு வாய்ப்பை தந்தது. மலேசியாவிலிருந்து வந்த சகோதரி வெரோனிகா ஃபிகியோலா கோ சியக் சுவான், வயது 22, இருதயத்தில் இருளிலும் பயத்திலும் வாழ்ந்து வந்தாள். ஆனால் அவள் பயம் தன்னை விட்டுப்போய்விட்டது என்றும், GCN–னிலே ஜெபத்தைப் பெற்ற பிறகு பலனடைந்ததாகவும் சொன்னாள்.

மலேசியாவைச் சார்ந்த சகோதரி ஃபொங் மிங் இன், வயது 38, ஜெபத்தைப் பெற்ற பொழுது அவள் தலையில் இருந்து கருப்பு நிழலும் புகையும் மறைந்ததைப் பார்த்ததாக சொன்னாள். அதன்பிறகு, அவள் சிந்தையில் இருந்துகொண்டு வந்த எதிர்மறையான யோசனைகளும் மறைந்துப் போனது. மங்கோலியா மான்மின் சபையிலிருந்து வந்திருந்த சகோதரர் டியுகுசய்ஹன் டிம்சிக், வயது 49, தன் இடுப்பிலிருந்து ஏதோ ஒன்று ஏறிவந்து கழுத்து வழியாக வெளியேறியதை உணர்ந்தார். பிறகு, வசனத்தின்படி வாழும் பெலனைப் பெற்று, இப்பொழுது ஒரு சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கிறார்.

இன்னும் அநேகர் பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர். கின்ஷாசா மான்மின் சபையை சார்ந்த கண்காணி அல்போனி ரெச்சிடி கியெம்பி, வயது 59, காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட ஜெபத்தைப் பெற்ற பிறகு காவல் கட்டுப்பாட்டு துறையில் பதவிஉயர்வைப் பெற்றுக்கொண்டார். அவர் சொன்னது, “சில ஆண்டுகளாக என் உயர்அதிகாரி நான் முன்னேறுவதற்கு தடையாக இருந்ததால், நான் பதவி உயர்வைப் பெறாமல் இருந்தேன். ஆனால் நான் அதை மேற்கொண்டதால் இந்த கோடைமுகாமில் முடிவாக பதிலைப் பெற்றுக் கொண்டேன். நான் மிகவும் சந்தோஷமாய் இருக்கிறேன்!”

காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் சுகமளிக்கும் கிரியைகள், மாற்றங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் சந்தோஷத்தை காண்பித்த தேவனுக்கே நாம் சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துவோம்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# ஆண்டவரின் கண்ணீர்

"அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்"
(எபிரெயர் 12:2).

•••

இயேசுவானவர் தமது இருதயத்திலிருந்து நிரம்பி வழிகிற அன்பினால் அதிகமாக கண்ணீர் சிந்தினார். அது ஆத்துமாக்களுக்காகவும் பிதாவாகிய தேவனுக்காகவும் இருந்த அன்பினால். நாம் ஆண்டவருடைய கண்ணீரின் அர்த்தத்தை புரிந்துக்கொள்ள வேண்டும். அவருடைய சம்பூரண அன்பு அவரது கண்ணீரில் கரைந்துள்ளது என்பதை உணர வேண்டும். இந்த கண்ணீரின் மூன்று அர்த்தங்களை நாம் பார்ப்போம்.

### முதலாவது. ஆண்டவரின் கண்ணீர் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக

இயேசுவானவர் இந்த உலகத்திற்கு இரட்சகராகும்படி வந்தார். அவர் தேவனுக்கு சமமாக இருந்தும், இயேசுவானவர் தம்முடைய மகிமையை துறந்து மனுஷ சாயலானார். தங்கள் பாவங்களினிமித்தம் நித்திய ஆக்கினையான மரணத்திற்குட்பட்ட ஆத்துமாக்களுக்காக இறங்கி வந்தார். அவர்களை நரகத்தின் பயங்கரங்களிலிருந்து அழகான பரலோகத்திற்குள் வழிநடத்துவதற்காக வந்தார். அவர் பரலோகத்தைக் குறித்து பிரசங்கித்து அற்புத அடையாளங்களை வெளிப்படுத்தினார்.

அவர் ஆத்துமாக்கள் தங்கள் இருதயத்தில் குறைந்தபட்ச நற்குணம் உள்ளவர்களாய் இருந்தால், அவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரனாகவும், கிறிஸ்துவாகவும் அறிந்துணர வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்தார். ஆனால் அநேக ஆத்துமாக்கள் அவரை விசுவாசிக்கவில்லை. அவர்கள் அவருக்கு பகைமை காட்டினார்கள். அவர்கள் அவரை பைத்தியமாகவும் கூட கருதினார்கள். இயேசுவின் உறவினர்களும் கூட இயேசுவை விசுவாசிக்கவில்லை. அவர்கள் மாறாக மக்களின் புரளிகளை நம்பி இயேசுவை தடுக்க முயற்சித்தார்கள்.

இயேசுவானவர் ஒய்வுநாளில் வியாதியஸ்தரை சொஸ்தமாக்கியபோது வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை ஆக்கினை தீர்த்து குற்றஞ்சாட்டினார்கள். இயேசுவானவர் மக்களிடமிருந்து பிசாசுகளை துரத்தியபோது, அவர்கள் இயேசுவை பரியாசித்து பிசாசுகளின் தலைவனாலே அப்படிச் செய்தார் என்று சொன்னார்கள்.

பாவிகளை மீட்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக ஆத்துமாக்களின் சாயலை இயேசுவானவர் தரித்துக்கொண்டார். ஆனால் மக்கள் இயேசுவை யார் என்று அறிந்து உணரவில்லை. இயேசுவானவர் பிரசங்கித்த பரலோகத்தின் சுவிசேஷத்தை கேட்கும்படி மக்கள் இயேசுவை சுற்றி கூடிய போது, வேதபாரகரும் சதுசேயரும் பொறாமை நிறைந்த கண்களோடு பார்த்தார்கள். இயேசுவானவர் பெரிய அற்புத அடையாளங்களை வெளிப்படுத்தியதால் அநேக மக்கள் அவரை பின் தொடர்ந்தார்கள். அதேவேளையில், இயேசுவை கொலை செய்யும்படி பரிசேயர்களும் பிரதான ஆசாரியர்களும் சதி திட்டம் தீட்டினார்கள்.

இயேசுவானவர்தாமே இந்த பொல்லாத மக்களின் இருதயத்தை கண்டு, கேட்டு, உணர்ந்தார். அவர் தேவனிடத்தில் கண்ணீரோடு ஜெபித்தார். அவர் தன்னை ஏற்றுக்கொண்ட பின்பற்றுபவர்கள் மாத்திரமல்ல, ஆனால் அவரை புறக்கணித்து, நியாயந்தீர்த்து, ஆக்கினைக்குள்ளாக தீர்த்தவர்களும்கூட இரட்சிப்பை அடைய வேண்டும் என்று விரும்பினார். இயேசுவின் கண்ணீர் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என விரும்பிய இயேசுவின் இதயமாக இருந்தது.

### இரண்டாவதாக, ஆண்டவரின் கண்ணீர் ஆத்துமாக்களின் மாற்றத்திற்காக

இயேசுவின் நாட்களில், அநேக மக்கள் மாம்சீக எண்ணங்களினால் குருடாக்கப்பட்டிருந்த படியினால் அவர்களால் ஆவிக்குரிய செய்திகளை புரிந்துக்கொள்ள முடியவில்லை. இயேசுவானவர், "நான் வானத்திலிருந்து இறங்கிய ஜீவ அப்பம்" என்று யோவான் 6 ஆம் அதிகாரத்தில் சொன்ன போது, இயேசுவை பின்பற்றியவர்களும்கூட முறுமுறுத்து, "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" என்றார்கள். அது முதல் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்."

தங்களது சுயநீதி சுயதோற்றமான எண்ணங்களோடு தேவனுடைய அநாதி திட்டங்களை புரிந்துகொள்ள முடியாத அநேக மக்களும் இருந்தனர். மத்தேயு 15ம் அதிகாரத்தில், பரி–சேயர்களும் சதுசேயர்களும் இயேசுவின் ஒவ்வொரு அசைவையும் கவனித்து இயேசுவை குற்றஞ்சாட்ட முகாந்திரம் தேடினார்கள். அவர்கள் தங்களது சுயநீதி மற்றும் சுய தோற்றத்தின்படி ஏதாகிலும் ஒத்து காணப்படவில்லை எனில் அவர்கள் இயேசுவுடன் வாக்குவாதம் செய்தார்கள். அவர்கள் பிடிவா–தத்தைக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக, இயேசுவானவர் வேத வாக்கியங்களினால் அவர்கள் அதைப் புரிந்துக்கொள்ள உதவினார். இயேசுவானவர் தம் பொதுவான ஊழியத்தின் போது, பல உதாரணங்கள் மற்றும் வேத வாக்கியங்கள் மற்றும் உவமானங்களின் மூலமாக பரிசேயர்களும் சதுசேயர்களும் தேவ–னுடைய நல்ல சித்தத்தை புரிந்துக்கொள்ளும் படியாக பிரசங்கித்தார்.

கூடுதலாக, எப்போதும் தம்முடனேகூட இருந்த சீஷர்களுக்காக இயேசுவானவர் அன்போடு ஜெபித்தார். தம்முடைய சிலுவை மரணத்திற்குப் பிறகு விட்டுச் செல்லுகிற தம்முடைய சீஷர்களை நினைத்து அவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றி அவருடன்கூட பரலோகத்தில் நித்திய காலமாக வாழ வேண்டும் என விரும்பினார். அவர் அவர்கள் ஒவ்வொருவரையும் நினைத்து, அவர்கள் பொறுப்பெடுத்து கொள்ளும்படியாக தேவனிடத்தில் ஜெபித்தார். தம்முடைய சீஷர்களுக்காக இயேசுவானவர் செய்த கண்ணீரின் ஜெபம் அவருடைய சீஷர்களுக்கு பெரும் பெலனாய் மாறியது.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 8:35–37ல் "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" என்று சொல்கிறது. ஆண்டவரின் சீஷர்கள் அனைவரும் யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக வந்த மத்தியா உட்பட அனைவரின் பெயர்களும் புதிய எருசலேமின் 12 அஸ்திபாரக் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

### ஆண்டவரின் கண்ணீர் மூன்றாவதாக, தேவனுடைய மகிமைக்காக

இயேசு மனுஷ சாயலாகி இந்தப் பூமிக்கு வந்த போது, ஜனங்கள் தேவனை தேடவில்லை. ஆனால் எதிராளியாகிய பிசாசுக்கும் சாத்தா–னுக்கும் அடிமைகளாயிருந்தார்கள். மக்களால் துதிக்கப்படுவதற்கு தேவன் ஒருவரே பாத்திரராயிருந்தாலும்கூட, அவர்கள் அர்த்தமற்ற விக்கிரகங்களை வழிபட்டு வந்தனர். ஆயினும், இயேசு–வானவர் தேவனை மகிமைப்படுத்துகிற ஜீவியம் செய்தார். தேவனுடைய சர்வ வல்லமையை வெளிப்படுத்துவதன் மூலமாக, இயேசுவானவர் தேவனுடைய நாமத்தை உயர உயர்த்தினார்.

இயேசுவானவருக்கு லாசரு வியாதியாயிருக்கிறான் என்று சொல்லப்பட்டபோது, அவர் யோவான் 11ம் அதிகாரம் 4ம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதிலே மகிமைப்படுவார் என்றார்." இறுதியாக இயேசுவானவர் நான்கு நாட்கள் மரித்துக் கிடந்த லாசருவை உயிர்ப்பித்தார். இந்த கிரியைகளுக்கு நன்றி, தேவனுடைய மகிமை பெரிதாக வெளிப்பட்டது. அநேக மக்கள் இயேசுவில் விசுவாசம் வைக்கத் தொடங்கினார்கள். மேலும், அவர் ஊமையர்களை பேச செய்தார், முடவர்களை நடக்கச் செய்தார், முடமானவர்களை சொஸ்தமாக்கினார், குருடரை பார்வையடையச் செய்தார், பிசாசுகளை துரத்தினார், குஷ்டரோகிகளை சொஸ்த மாக்கினார்.

இயேசுவானவர் இந்த அடையாளங்களை காண்பித்ததன் காரணம் அவர் மக்கள் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும் என விரும்பினார். அவர் மக்கள் தேவன் பெரியவர் எனவும் அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என விசுவாசிக்க வேண்டும் எனவும் விரும்பினார். அவர் அவர்களை தேவன் ஒருவரே மெய்யான தேவன் என அறிந்து மக்கள் அவர் ஒருவருக்கே ஆராதனையை ஏறெடுக்க வேண்டும் என விரும்பினார்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்கும்போது தேவன் நமக்குப் பதிலளிப்பதற்கு காரணமும் இதுவே. யோவான் 14:13ல் இயேசு–வானவர், "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன் என்றார்."

இயேசுவின் சிலுவைப்பாடுகளும்கூட தேவ–னுடைய மகிமைக்காகவேயிருந்தது. பாவிகளுக்காக இயேசுவானவர் கிருபாதாரபலியானபோது தான் எண்ணற்ற ஆத்துமாக்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாயினார்கள். இயேசு–வானவர் மரிக்கையில் தேவன் எண்ணற்ற பிள்ளைகளை பெறும்போது எவ்வளவாய் தேவன் பிரியங்கொள்வார் என்று எதிர்பார்த்தார். இயேசுவானவருடைய இப்பேர்ப்பட்ட இருதயம் அவர் கைது செய்யப்பட்ட அந்நாளில் பிதாவினிடத்தில் ஏறெடுத்த இயேசுவின் ஜெபத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இயேசு–வானவர் யோவான் 17:4–5ல், "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படும்" என ஜெபித்தார்.

நீங்கள் பார்க்கிற வண்ணமாக, இயேசுவானவர் தமது ஜீவியத்தை தேவனுடைய மகிமைக்காக மட்டுமே வாழ்ந்தார். தேவனுடைய மகிமைக்காகவே மரித்தார். இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருந்த போது அநேக கண்ணீர் சிந்தியிருந்தாலும் அவரது கண்ணீரின் கனி மிகப் பெரிதாயிருக்கும். அநேக தேவனுடைய பிள்ளைகள் பிறந்துள்ளார்கள், தேவன் அவர்கள் மூலமாய் மகிமைப் பட்டுள்ளார். இன்னமும் சதாகாலமும் மகிமைப் படுவார்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோ–தரிகளே, ஆண்டவரின் சிந்திய கண்ணீர், ஆண்டவரின் அன்பின் கண்ணீர், ஆத்துமாக்களுக்காக அவரது தியாகத்தின் நிருபணமாக இருக்கிறது. நீங்கள் ஆண்டவருடைய கண்ணீரினால் விளைந்த கனிகள் (சங்கீதம் 126:5–6). நீங்கள் மிகச் சிறந்த அதிக ஆழமான கனிகளை விளைவித்து தேவனை மகிமைப் படுத்தும்படியாக ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

# “நேபாளத்தில், நாங்கள் கோடை ஏகாந்த இடத்தில் இருப்பதுபோல உணர்ந்தோம், சுகமும் ஆசீர்வாதங்களும் பொங்கி வழிந்தன!”


சாட்சிசொன்னவர்களில் சிலர்

GCN நேரடி ஒளிபரப்பின்மூலமாக நேபாள் மான்மின் திருச்சபை அங்கத்தினர்கள் 2017 கோடை ஏகாந்தத்தில் சேர்ந்துக்கொண்டனர். ஆகாயத்தையும் காலத்தையும் கடந்து பரிசுத்த ஆவியின் ஆச்சரியமான கிரியைகளை அவர்கள் அனுபவித்துள்ளனர்.

சகோதரர் சானா லானா, 52, பயங்கரமான தலைவலியிலிருந்து விடுதலைப் பெற்றார், மகிழ்ச்சி அவரிலே வந்தது. சகோதரி ரீட்டா பூஜெல், 28, முன்னே காயப்பட்டிருந்த இடது கால் வலியிலிருந்து சுகம் பெற்றார். சகோதரர் ராம்ஜீ சுனார், 14, ஒரு மாதமாக கஷ்டப்படுத்திய இடது கணுக்கால் வலியிலிருந்து சுகம் பெற்றார். அவருக்கு சபைக்கு செல்வதும் பிடித்துள்ளது; சிலுவையின் செய்தி என்ற புத்தகத்தை வாசித்தபோது தேவனைக் குறித்து அறிந்துக்கொண்டேன் என்று சொன்னார்.

சகோதரி தெபோரா சௌதிரி, 29, நெஞ்சு வலியின் காரணமாக நடப்பதும் சுவாசிப்பதும் கஷ்டமாயிருந்தது, ஆனால் ஜெபத்திற்குப் பின்னர், வேதனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, நன்றாக நடக்க ஆரம்பித்தார். மேலும் அவருக்கு இருந்த தொடர் அஜீரண கோளாரிலிருந்து சுகம்பெற்றார். சகோதரி ஹேனா சுனார், 43, தைராய்டு கோளாரு காரணமாக சுவாசிப்பதில் கஷ்டப்பட்டு வந்தார். மேலும் கீழ்வாதத்தினால் சில நேரம் சரீரம் முழுவதும் இருந்த வேதனையினால் கஷ்டப்பட்டு வந்தார். ஆனால் ஜெபத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு வேதனை மறைந்தது; அவர்களால் இயல்பாக சுவாசிக்க முடிந்தது.

கண்காணியை ஜோதி மகாராஜன், 39, வலது மூட்டிலும் பாதத்திலும் வலியோடிருந்தார். அது அவரை நடக்க விடாதபடி கஷ்டப்படுத்தியது. ஆனால் ஜெபத்திற்கு பின் வேதனையெல்லாம் மறைந்தது. இயல்பாக நடக்க முடிந்தது. சகோதரர் ஆயிதே சிங்வைபா, 84, கால்களில் நீர் கோவையாலும் உதடுகள் மற்றும் வாய் காய்ந்த நிலையிலும் ஆறு மாதங்களாக கஷ்டப்பட்டார். ஆனால் ஜெபத்திற்குப் பின் வீக்கம் குறைந்தது; உதடு மற்றும் வாயிலிருந்து காய்ந்த தன்மை போய்விட்டது.

சகோதரி நம்ரதா பகதி, 57, இருகண்களிலும் கண்பார்வை கோளாறு மற்றும் மூச்சு திணறலிலிருந்து 15 ஆண்டுகள் கஷ்டப்பட்டார். ஆனால் ஜெபத்திற்குப் பின்னர், அவர் கண் பார்வை தேர்ச்சியடைந்தது. அவரது மூச்சு கோளாரிலிருந்த இறுக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றார்.

சகோதரி நேகா தாபா மாகத், 10, தீக்காயங்களால் ஏற்பட்ட இடது காது மற்றும் காது மடலிலிருந்த வேதனையிலிருந்து சுகம் பெற்றார்; சகோதரி சுடிக்ஷியா ராய், 14, பல் வலியிருந்தும், சகோதரி கான்சிமாயா, 39, கண் வலியிலிருந்தும் மற்றும் சகோதரி ஹிரா கேசி, 49, வாய் வலியிலிருந்தும் சுகம் பெற்றனர்.

சகோதரி அஸ்மிதா சில்வால், 33, ஜீவனுள்ள தேவன் மேல் வலுவான விசுவாசம் பெறலானார். அவளது கணவனும் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கத்தக்கவராக விசுவாசத்தில் வளர்ந்தார். அவரது தாய், சித்தா சென், ஒரு பெரிய மரத்திலிருந்து கீழே விழுந்து விட்டார். அவரது விலா எலும்புகள் மற்றும் கை எலும்புகள் முறிந்துவிட்டது. அவர்கள் மருத்துவமனையில் இருந்தார்கள். ஆனால் ஜெபத்திற்குப் பின்பு, அவர்களின் அறிகுறிகள் தேறி ஐந்து நாளுக்குப் பிற்பாடு மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்கள் கோடை ஏகாந்தத்தில் சேர்ந்து ஆராதித்தார்கள். அவர்களது வேதனையிலிருந்து அற்புத சுகம்பெற்று தூங்கும்போது இப்போது வேதனையில்லாமல் கீழே படுத்து தூங்குகிறார்கள்.

சகோதரர் ராம் பகதூர் ரம்ஃபா, 47, தன் மனைவியின் பலவந்ததின் பேரில் அக்கினி முகாம் துதி ஆராதனையில் பங்கு பெற்றார். அவர் மாபெரிதான கிருபை பெற்றார். பரிசுத்த ஆவியின் நிறைவில், அவர் தான் பரலோகத்தில் இருப்பதுபோல உணர்ந்ததாக அறிக்கைச் செய்தார். சகோதரி குந்தி மகேர், 47, அவர் வேதனையில் இருந்ததாக சொன்னார். ஆனால் தலைமை போதகர் அறிவர். லீ அவர்களை சந்தித்து, அவள் தேவனுடைய சத்தத்தை அறிந்ததாகவும், அவள் வாழ்வு மாறியதாகவும் சொன்னார். சகோதரி நகிம் தானி தோ, 39, தனது மகிழ்ச்சியை “ஆச்சரிய கிருபை” என்ற பாடலை பாடிய போது முதன் முதலாக அவர்கள் மனந்திரும்புதலின் கிருபையை பெற்றுக்கொண்டார்கள்.

சகோதரர் அமன் ஷ்ரேஷிதா, 19, அக்கினி முகாம் துதி ஆராதனையை நடத்திய மேய்ப்பரின் அன்பால் தொடப்பட்டு தன்னைப் புதுப்பித்து விசுவாசத்தில் வளர உறுதி பூண்டார். சகோதரி சரிதா லோ, 32, நேபாள் மான்மின் திருச்சபை செல்வதற்கு முன்பாக வாழ்வில் பலவகையான பிரச்சனையில் கஷ்டப்பட்டார்; “சாப்பிட உணவு இல்லாமல் பட்டினியாயிருந்தேன். ஆனால் சபைக்குச் சென்ற பிற்பாடு நான் ஆசீர்வாதம் பெற்றேன். இப்போது சாப்பிட போதிய அளவு உணவு உள்ளது. என் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பமுடிகிறது. கூடுதலாக, நான் ஏகாந்தத்தில் ஜெபத்தைப் பெற்ற பிறகு நீண்ட கால வயிற்றுவலி நீங்கியது.”

## தட்பவெட்பம் 25 அல்லது 26 டிகிரி செல்சியஸாக ஏற்படுத்தப்பட்டது, ஜப்பானிய அங்கத்தினர்களும் புயலிலிருந்து பாதுகாக்கப்பட்டார்கள்!




ஆகஸ்டு 6, 2017 அன்று, ஏகாந்தத்திற்கு ஒரு நாளைக்கு முன்பு, தலைமை போதகர் அறிவர். ஜோராக் லீ அவர்கள் தட்பவெட்பம் 25 அல்லது 26 டிகிரி செல்சியஸாக ஏகாந்தத்தில் இருக்கும் என்று கூறினார். அவர் சொன்னபடியாக, மூஜூ, தேகியுசன் ரிசார்டில் ஏகாந்தம் நடைபெற்ற இடத்தில் 25 முதல் 26 டிகிரி செல்சியஸாக இருந்தது. இந்த தட்பவெட்பத்தை கட்டுப்படுத்துகிற அதிசயம் அயல் தேச கிளை சபைகளிலும் வெளிப்பட்டது. அங்கத்தினர்கள் இந்த ஆவிக்குரிய மண்டலத்தை பகிர்ந்தார்கள்.

GCN நேரடி ஒளிபரப்பு வழியாக ஏகாந்தத்தில் மங்கோலியா மான்மின் திருச்சபையினர் பங்குப்பெற்ற போது அந்த சபையை சுற்றிலும் 25 முதல் 26 டிகிரி செல்சியஸாக இருந்தது. மதுரையில் 32 டிகிரி செல்சியஸாக இருந்தது. ஆனால் கோடை ஏகாந்தம் நடப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு மழை பெய்தது, அது தட்பவெட்பம் 26 டிகிரி செல்சியஸாக குறைய வைத்தது. மதுரை மான்மின் திருச்சபை அங்கத்தினர்கள் ஏகாந்தத்திற்கு கூடி வருகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அக்கினி முகாம் துதி ஆராதனையின்போது குளுமையான காற்று அடித்து நிகழ்ச்சி முடியும் வரையில் 26 டிகிரி செல்சியஸாக நிலைப்படுத்தப்பட்டது. DR காங்கோவில் உள்ள கின்ஷசா மான்மின் திருச்சபை அங்கத்தினர்கள் பதிவுசெய்யப்பட்ட ஏகாந்தத்தை GCN மூலமாக பார்த்தார்கள். அவர்கள் அதைப் பார்க்கையில் தட்பவெட்பம் 25 டிகிரி செல்சியஸாக மாறியது. பொதுவாக அங்கு பகலில் 30 முதல் 33 டிகிரி செல்சியஸாக இருக்கும். மான்மின் அங்கத்தினர்கள் பலர் இந்த வானிலை கட்டுப்படுத்தப்படுகிற அற்புதங்களை அனுபவித்தார்கள்.

ஏகாந்தத்திற்கு சில நாளைக்கு முன்பு, ஜப்பானில் நோரு புயலைக் குறித்து அங்கத்தினர்கள் கேள்விப்பட்டார்கள். அந்த காலத்தில் அது ஐந்தாவது புயல். வானிலை அறிக்கை அது கியு ஷீவில் ஆகஸ்டு 6ம் தேதி அன்றும், டோக்கியோவில் ஆகஸ்டு 7 அன்றும் மையமிடுகிறது என்று அறிக்கைச் செய்தார்கள். அவர்கள் மத்திய திருச்சபைக்கு ஜெப விண்ணப்பம் அனுப்பினர்கள். ஆகஸ்டு 6 அன்று ஞாயிறு காலை ஆராதனையின்போது அவர்கள் கொரியாவிற்கு வருவதற்கேதுவாக அறிவர். லீ அவர்கள் அவர்களுக்காக ஜெபித்தார்கள். அதற்கு பின் புயலின் சீற்றம் வலுவிழந்து மறைந்துப்போனது. அவர்கள் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் கொரியாவிற்கு வர முடிந்தது. நாற்பத்தேழு போதகர்களும் அங்கத்தினர்களும் மீண்டுமாக பரிசுத்த ஆவியின் வல்லமையை அனுபவித்தார்கள்.

## GCN வழியாக ஜெபத்தைப் பெற்ற பின் நான் சுகமாகி ஆரோக்கியமாகும் கனவு கண்டேன்.



**கண்காணியை மரியா, 45, சென்னை மான்மின் திருச்சபை, இந்தியா.** அடிக்கடி வியாதிப்படுவதால் அவர்கள் சரீரம் சூடாகவே இருக்கும். கடந்த இரண்டு ஆண்டுகளாக யாராவது அவர்களது மூட்டுப்பகுதியை தொட்டால் மூட்டுவாதம் காரணமாக வேதனையை உணர்ந்தார்கள். இந்த வருடம், அவர்கள் GCN வழியாக ஏகாந்தத்தின் நேரடி ஒளிபரப்பில் பங்குப் பெற்றார்கள். அவர்கள் அறிவர். லீ அவர்களது ஜெபத்தைப் பெற்றபோது, அவர்கள் மீது யாரோ ஒருவர் குளிர்ந்த தண்ணீரை மூன்று முறை ஊற்றுவதுபோல உணர்ந்தார்கள். அந்த குளுமை அவர்களது சரீரத்திலும் இருதயத்திற்குள்ளும் சென்றது.

வீட்டுக்குச் சென்று, அவர்கள் படுத்திருக்கும் போது ஒரு மர்மமான கனவு இரவிலே கண்டார்கள். அவர்கள் தண்ணீரில் இருந்தார்கள், திடீரென்று தண்ணீர் மறைந்துவிட்டது. மேலும் அவர்கள் அடிவயிற்று பகுதியில் இருந்து ஒரு பூனையும், மேல் பகுதியிலிருந்து ஒரு வௌவாலும் வெளியே வந்தது. பின்னர் ஒரு பெரிய புலி அவர்கள் நெஞ்சிலிருந்து வெளியே வந்து அவளிடம், “எனக்கு நீ வேண்டும்” என்றது. அப்போது, கொரிய பெண்மணி ஒருவர், “மரியா ஆண்டவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டுள்ளாள்” என்று சொன்னார்கள். அந்த புலி கோபமூண்டது. அந்தப் பெண்மணி மரியா மேய்ப்பருடைய மந்தை என்று சொன்னபோது, அது ஓடிப்போய்விட்டது. பிற்பாடு, அவர்கள் சரீரத்திலிருந்த வேதனை அனைத்திலிருந்தும் சுகம்பெற்றார்கள். கீழ்வாதத்திலிருந்தும் சுகம்பெற்று அவர்கள் ஆரோக்கியமானார்கள்.



**சகோதரி பூச்சர், 19, சியாங்ராய் மான்மின் திருச்சபையிலிருந்து** ஏகாந்தத்திற்கு முன்பதாக மூன்று வாரங்களாக பயங்கர வயிற்று வலியில் கஷ்டப்பட்டார்கள். மருத்துவமனையில் அவளது அப்பண்டிஸ் வெடித்து பெரிடோனிஸ் நிலைக்குச் சென்றது. அதற்காக அறுவைச் சிகிச்சை செய்தார்கள். ஆனால் புண்ணை கிருமி கொல்லி செய்யும்போது ஒரு பிரச்சனையாகி சீல் கட்டி உருவாகியது.

அவள் GCNனிலே ஏகாந்தத்தில் பங்குப்பெற்று, ஜெபத்தைப் பெற்றுக் கொண்டாள். அந்த இரவு அறிவர். லீ அவள் தலையில் கை வைப்பது போல சொப்பனங்கண்டாள். சுகத்தின் நிச்சயத்தைப் பெற்றாள்; மருத்துவ பரிசோதனையின் முடிவு சீல் கட்டி மறைந்தது என்று காட்டியது.



## “25 ஆண்டுகால நீரிழிவு வியாதியின் சிக்கல்களிலிருந்து நான் சுகமானேன்!”

கண்காணியை ரெபேக்கா, வயது 47, சென்னை மான்மின் சபை, இந்தியா



மூன்று வருடங்களுக்கு முன்பு உயர்இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு வியாதியின் சிக்கல்களால் என்னால் நிற்கக்கூட முடியவில்லை. என் நீரிழிவு அளவு 600க்கும் மேல் போய்விட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். நாட்கள் நகர நகர மிகவும் மோசமான நிலைக்குள் போனேன். என் வலது கண்ணின் லென்ஸை சீர்குலைக்கும் அரிதான வியாதி ஏற்பட்டதால் முடிவில் என் வலது கண்ணில் பார்வையை இழந்துபோனேன்.

எப்படியிருந்தாலும், ஆராதனை வேளைகளில் GCN வாயிலாக தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக் கொண்டேன்; அறிகுறிகள் தேற ஆரம்பித்தது. போதகர் ஜோசப் ஹான், என் சபை விசுவாசிகளும், என் குடும்பத்தினரும் எனக்காகப் பரிந்துபேசி ஜெபித்தனர், அதனால் நான் ஆரோக்கியத்தைப் புதுப்பித்துக்கொண்டேன்.

இதற்கிடையில், ஜூலை 2017ல் முழுமையான சுகத்தைப் பெறுவதற்காக நான் ஒருநாள் உபவாசத்தையும் ஜெபத்தையும் ஏறெடுத்தேன். ஆனால் என் இரத்தத்திலிருந்த சர்க்கரையின் அளவு அதிகமானதால், குமட்டலின்நிமித்தம் மூன்று வாரங்களாக என்னால் சரிவர தூங்க முடியவில்லை. என்னால் நடக்கவும்கூட முடியவில்லை. எனினும், தேவன் என் ஜெபத்திற்குப் பதிலை தருவார் என்று விசுவாசித்து, அதை மேற்கொண்டேன்!

என் இரண்டாவது மகன் மான்மின் உலக வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்களின் உதவியினால் மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற முடிந்தது. சிறப்பு தானியேல் ஜெபத்தில் பங்குப்பெற்ற அவனுக்கு பரிசாக அந்த வாய்ப்பு கிடைத்தது.

ஆகஸ்டு 6 அன்று, ஞாயிற்றுக்கிழமை காலையில் கொரியாவில் தலைமை போதகருடைய ஜெபத்தை அவன் பெற்றுக்கொண்டான். அந்த நேரத்தில்தானே, இந்தியாவில் இருந்த எனக்கு ஒரு அற்புதம் நடந்தது. என் சரீரத்தில் திடீரென்று பெலன்வந்ததால் என்னால் அசைய முடிந்தது. என் சரீரம் இலகுவையும், விடுதலையையும் உணர்ந்தது. அந்த நாளில் பெலனடைந்து நான் திருச்சபைக்குச் சென்றேன். அந்த நாள் இரவில், தமிழ் மான்மின் செய்தித்தாளை தபாலில் அனுப்பும் வேலையை தன்னார்வமாகவும் செய்தேன்.

ஆகஸ்டு 7 அன்று, கோடை முகாமின் முதல் நாளிலே GCN நேரடி ஒளிபரப்பு வாயிலாக நான் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். பிறகு, என் வயிற்றிலிருந்து ஏதோ ஒன்று வெளியேறியதை நான் உணர்ந்தேன். அதன்பிறகு, எல்லா வலிகளும் மறைந்துப்போனது, நான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டேன். வீட்டிற்கு திரும்பிய பிறகு நன்றாக தூங்கினேன். அல்லேலூயா!

25 வருடங்களாக எனக்கு தொந்தரவு தந்த நீரிழிவு வியாதியின் சிக்கல்களில் இருந்து நான் விடுதலைப் பெற்றுக்கொண்டேன். நான் மறுபடியும் பிறந்ததைப் போல உணர்ந்தேன். என் பிரச்சனைகளை எல்லாம் தீர்த்து, என்னை ஆசீர்வாதங்கள் பதில்கள் நிறைந்த பாதையில் நடத்துகிற தேவனுடைய அன்பிற்கு என் நன்றிகளை நான் செலுத்துகிறேன்.



## “நான் ஓட முடிவதால் சந்தோஷமாய் இருக்கிறேன்!”

சகோதரர் டேனியேல் பிரேன்,
வயது 18, நைரோபி மான்மின் பரிசுத்த திருச்சபை, கென்யா



என் சிறு வயதிலிருந்து எனக்கு இருதய பிரச்சனைகள் இருந்தது. நான் வேகமாய் நடக்கும்பொழுதும் ஓடும்பொழுதும் வலியை உணர்ந்தேன். என் விருப்பத்தின்படி என்னால் நடக்கவோ ஓடவோ முடியவில்லை. ஆகஸ்டு 7 அன்று, GCN வழியாக 2017 மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்ற பிறகு எனக்கு மாற்றம் ஒன்று நிகழ்ந்தது.

தலைமை போதகர் கருத்தரங்கை முடித்த பிறகு, மனந்திரும்புதலுக்கான பாடலும் ஜெபமும் தொடர்ந்தது. ஒரு கிறிஸ்தவனாய் முன்பு நான் மனந்திரும்பியும் மீண்டும் தொடர்ச்சியாக பாவம் செய்தேன் என்பதை நினைத்து முற்றிலும் மனந்திரும்பினேன். மேலும் நான் என் இறுமாப்பு, சுயநலமான செயல்கள், கசப்புணர்வுகளை குறித்தும் மனந்திரும்பினேன்.

பிறகு, தலைமை போதகர் நமக்காக ஜெபித்தார். அவருடைய ஜெபத்தின்போது, என் கால்கள் நடுங்கவும் தள்ளாடவும் ஆரம்பித்தது. என் கால்களிலிந்து ஏதோ ஒன்று வெளியேறுவதை நான் உணர்ந்தேன். அதன்பிறகு, நான் நன்றாக விடுதலையை உணர்ந்தேன்.

அடுத்த நாளில், கோடை முகாமிற்காக நான் திருச்சபைக்குச் சென்ற பொழுது வானிலை குளிர்ச்சியாக இருந்தது. திடீரென்று நான் ஓட விரும்பியதால், ஓடத் துவங்கினேன். ஆச்சரியவிதமாக, ஓடும்பொழுது என் மார்பிலும் எவ்வித வலியும் இல்லை. நான் பிரமிப்புடன் மிகவும் வேகமாக நடக்க முயற்சித்தேன். மீண்டும் எவ்வித வலியும் இல்லை. எனக்கு தொந்தரவு ஏற்படுத்தி கொண்டிருந்த மார்பு வலியிலிருந்தும் நான் விடுதலையடைந்தேன். அல்லேலூயா!

நான் தேவனுடைய சித்தத்தின்படி வாழாமல் பாவம் செய்து கொண்டிருந்தபோதிலும் மனந்திரும்பும்படி எனக்கு கிருபையை அளித்து, சுகத்தையும் எனக்குள் புதிய கிரியைகளையும் செய்த தேவனுக்கு நான் நன்றிகளை செலுத்துகிறேன்.



## “நான் 5 வருடங்களாக நீடித்த முதுகெலும்பு வளைவிலிருந்து சுகமடைந்தேன்!”

சகோதரி ஜோஸ்பின் அடோரபல்,
வயது 26, மனிலா மான்மின் சபை, பிலிப்பைன்ஸ்



கடந்த ஐந்து வருடங்களாக முதுகு எலும்பு பக்கவாட்டில் வளைந்திருந்ததால் முதுகில் தீராத வலி இருந்து வந்தது. நான் நிற்கும்போது அல்லது நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கும்போது வலியை உணர்ந்தேன். வேலைபார்க்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதால் வலி அதிகமாக இருக்கும். என் முதுகில் வேதனையை உணர்ந்ததால், என் கையால் முதுகை அவ்வப்போது அடித்துக்கொண்டும், என் முதுகை நெழித்துக் கொண்டும், அல்லது எனக்கு வரும் வேதனையை போக்க உட்காரும் முறையை மாற்றிக்கொண்டும் இருப்பேன். கர்த்தர்பேரில் இருந்த விசுவாசத்தினால் சுகமடைய விரும்பினேன். நான் தேவனிடத்தில் ஜெபித்தேன்; எவ்வித மருந்துகளை எடுக்கவும் இல்லை, மருத்துவ சிகிச்சைகளைப் பெறவும் இல்லை.

இந்தப் பிரச்சனையின்நிமித்தம் 2017 மான்மின் கோடை முகாம் வருவதை அதிகமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். முதல் நாளில், GCN வழியாக என் சபை விசுவாசிகளோடு முகாமில் பங்குப்பெறுவதற்காக சபைக்குச் சென்றேன். நான் மிகவும் சந்தோஷமாக, எதிர்ப்பார்ப்பு நிறைந்தவளாக இருந்தேன்.

கருத்தரங்கிற்கு பிறகு தலைமை போதகர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த வேளையில், என் முதுகில் ஒரு மென்மையான தொடுதலை உணர்ந்தேன், சௌகரியத்தையும் உணர்ந்தேன். அதன்பிறகு, என் முதுகில் வலியே இல்லை. கூடுதலாக, ஆங்கிலத்தில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளை டகலாக் மொழியில் மொழிபெயர்க்க 4 மணி நேரம் உட்கார்ந்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் எவ்வித பிரச்சனையும் எனக்கு ஏற்படவில்லை!

நல்ல தேவனை சந்திக்கும்படி என்னை வழிநடத்தி, எனக்கு சுகத்தையும் பதில்களையும் தந்த கர்த்தருக்கே எல்லா நன்றிகளை நான் செலுத்துகிறேன்.

எக்ஸ்ரே ஸ்கேன்




ஜெபத்திற்கு முன்பு, 5 டிகிரி வளைவில் முதுகெலும்பு இருந்தது.

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN
World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com